பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 09 புதன்கிழமை 23.06.2021 கதிர் 96

# 433 பேர் கைது!

நாட்டில் கடந்த 24 மணிநேரத்தில், தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய 433 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்களில் அதிகளவானோர் எம்பிலிப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இதுவரை ☞2

# சபாநாயகர் முன் ரணில் எம்.பியாகப் பதவியேற்பு

## சம்பந்தன் – மனோவுக்கிடையில் ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்வு



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இன்று முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்றம் கூடியதைத் தொடர்ந்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்தார்.

அதன்பின்னர் அவர் தனக்கென எதிர்க்கட்சி பக்கத்தில் முன்வரிசையில் ☞2

# இன்றிரவு முதல் மீண்டும் பயணக் கட்டுப்பாடு அமுல்

## வெள்ளி அதிகாலை தளர்வு



நாடு முழுவதும் இன்றிரவு 10 மணி முதல் மீண்டும் பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்படவுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மே 21ஆம் திகதி முதல் ☞2

# நிர்வாக அதிகாரங்கள் இராணுவத்தினர் வசம்: கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் தோல்வி

## சபையில் விளாசித் தள்ளினார் ரணில் எம்.பி.

**அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் இராணுவத்தினரிடம் வழங்கப்படுகின்றமை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையிலான தேசிய செயற்பாட்டு மையம் படுதோல்வி கண்டுள்ளது.**

**- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி. தெரிவித்தார்.**

**அவர் இன்று தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற பின்னர் ஆற்றிய உரையின்போதே மேற்கண்டவாறு கூறினார்.** ☞2



## எரிபொருள் விலையேற்றைக் கண்டித்து

# சபைக்கு நடுவே அமர்ந்து சஜித் அணி ஆர்ப்பாட்டம்

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்தும், அதிகரிக்கப்பட்ட விலையைக் குறைக்குமாறு வலியுறுத்தியும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள், நாடாளுமன்றத்துக்குள் இன்று எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இதனால், சபைக்குள் சலசலப்பு ஏற்பட்டது.

சபைக்குள் எழுந்து நின்றும், சிலர் சபைக்கு நடுவே



# குருநகர் முடக்கம்?

## சுகாதாரப் பிரிவு கோரிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூன் 23

யாழப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட குருநகர் கிராமத்தை முடக்குமாறு சுகாதாரத் திணைக்களத்திடம் அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குருநகர் கிராமத்தின் ஜே/69 மற்றும் ஜே/71 கிராம சேவகர் பிரிவுகளில் கடந்த இரு நாள்களில் கிடைத்த பி.சி.ஆர். பெறுபேற்றின் அடிப்படையில் 40 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையால் யாழ் சுகாதார வைத்திய அதிகாரியால் இந்த அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் ஜே/69 கிராம சேவகர் பிரிவில் 50 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகளில் 12 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்ட அதேநேரம் ஜே/71 கிராம சேவகர் பிரிவில் 123 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகளில் 23 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி ☞2

# இந்தியாவின் யாழ் துணைத் தூதராக இளைஞர் ராகேஷ் நடராஜ் நியமனம்



யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின்புதிய துணைத் தூதுவராக ராகேஷ் நடராஜ் (வயது 37) நியமிக்கப்பட்டிருக்கின்றார் என அறிய வருகின்றது.

இவர் இதுவரை காலமும் கண்டியில் உள்ள துணைத் தூதரகத்தில் துணைத் தூதுவராகப் பணியாற்றி வந்தவர்.

தற்போது யாழ் துணைத் தூதரகத்தில் துணைத் தூதுவராகப் பணியாற்றும் பாலச்சந்திரன், அடுத்த மாத இறுதியில் ஆபிரிக்க நாடான சூரினாமிற்கான புதிய இந்தியத் தூதுவராகப் பதவியேற்பார் ☞2

# பொசன் பௌர்ணமி தினமான நாளை அரசியல் கைதிகள் எழுவர் விடுதலை!

## இராஜாங்க அமைச்சர் ஷெஹான் ரத்வத்த தெரிவிப்பு

பல ஆண்டுகளாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஏழு பேர் விடுதலை செய்யப்படவுள்ளனர் என சிறைச்சாலை முகாமைத்துவ மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்தையை மேற்கோள் காட்டி 'டெய்லி மிரர்' ஆங்கிலப் பத்திரிகை இவ்வாறு



செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் பொசன் பௌர்ணமி தினமான நாளை அவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இதுவரையில் 4,919 பேருக்கு யாழில் கொரோனாத் தொற்று

## 72 பேர் உயிரிழப்பு

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுடன் இதுவரை 4 ஆயிரத்து 919 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

குறித்த தொற்றாளர்களில் 3 ஆயிரத்து 696 நபர்கள் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ். மாவட்டத்தில் இதுவரை 72 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

தற்போது உடுவில் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் ☞2

## நிர்வாக அதிகாரங்கள் இராணுவத்தினர் வசம்; .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் அரசமைப்புக்கு அமைய நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பு அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்துக்கு உரியதாகும்.

இந்த அரசு நாட்டில் பெரியவர்களுக்கு வரிச் சலுகைகளை வழங்கி, சிறியவர்களைப் பட்டினியில் போட்டுள்ளதை நாம் அவதானிக்கின்றோம்.

2019ஆம் ஆண்டில் நாட்டில் வெளிநாட்டு நிதி கையிருப்பாக 700 கோடி டொலர்கள் இருந்தன. இப்போது 400 கோடி டொலர் வரையில் குறைவடைந்துள்ளன.

இலங்கைக்குக் கோடிக்கணக்கான வெளிநாட்டு கடன்கள் உள்ள நிலையில், கடன்களில் இருந்து விடுபடுவதற்கான திட்டங்கள் இருக்க வேண்டும்.

சர்வதேச நிதி வழிகளின் ஊடாக கொடுக்கல் - வாங்கலைச் செய்வதே நாட்டை மீட்பதற்காக இருக்கும் ஒரே வழி. அது இல்லையென்றால் அரசு கூறும் திட்டம் என்ன?

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் முற்றாகத் தோல்வியடைந்துள்ளது. அதிகாரங்கள் அமைச்சரவைக்கும் நாடாளுமன்றத்துக்குமே இருக்க வேண்டும்.

நிதிச் சபையின் கலந்துரையாடலுக்கு நிதி அமைச்சரோ அல்லது நிதி இராஜாங்க அமைச்சரோ வருவதற்குப் பதிலாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா வருகின்றார். இதனை அனுமதிக்க முடியாது - என்றார்.

## இன்றிரவு முதல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமுலில் இருந்த பயணக் கட்டுப்பாடு ஒரு மாதத்தின் பின்னர் ஜுன் 21ஆம் திகதி தளர்த்தப்பட்டது.

இந்நிலையில், நாளை பௌர்ணமி விடுமுறைதினம் என்பதால் அதன்போது பயணக் கட்டுப்பாட்டை விதிப்பதற்கு கொரோனாத் தடுப்புச் செயலணி தீர்மானித்துள்ளது.

இதன்படி இன்றிரவு 10 மணி முதல் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணி வரையில் 30 மணித்தியாலங்களுக்குப் பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்படும்.

இதேவேளை, வார இறுதி நாள்களில் பயணக் கட்டுப்பாட்டை அமுல்படுத்துவதா? இல்லையா? என்பது தொடர்பாக நாளை கொரோனாத் தடுப்புச் செயலணி தீர்மானம் எடுக்கவுள்ளது.

நாடு முழுவதும் பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டாலும் மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. - என்றார்.

## சபாநாயகர் முன் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கப்பட்டுள்ள 13 ஆவது ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவின் ஆசனத்துக்கு அருகில் உள்ள 12 ஆவது ஆசனம் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுக்கும், 14 ஆவது ஆசனம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு ஆகஸ்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு மாவட்டத்திலும் ஆசனங்கள் எதனையும் பெற்றுக்கொள்ளாதபோதும், நாடு முழுவதும் பெற்றுக்கொண்ட வாக்கு விகிதத்துக்கு அமைய தேசியப்பட்டியல் ஆசனம் ஒன்றைப் பெற்றுக்கொண்டது.

அந்த ஆசனத்துக்கு ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்க கட்சி தீர்மானித்ததைத் தொடர்ந்து, அது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு சில தினங்களுக்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தது. இதன்படி இன்று அவர் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

## சபைக்கு நடுவே ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமர்ந்திருந்தவாறும் கோஷங்களை எழுப்பினர்.

எரிபொருள்களின் விலைகளைக் குறைக்குமாறு கோரியும் அரசுக்கு எதிரான சுலோகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியவாறும் ஐக்கிய மக்கள் சக்தியினர் கோஷங்களை எழுப்பினர்.

## யாழில் 4,919 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் தற்போது 2 ஆயிரத்து 721 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 71 நபர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நாட்டில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு யாழ். மாவட்டத்தில் இதுவரை 71 ஆயிரத்து 721 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன - என்றார்.

## இந்தியாவின் யாழ் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரிகின்றது.

யாழ்ப்பாணத்தில் புதிய துணைத் தூதுவராகப் பதவியேற்கவிருக்கும் ராகேஷ் நடராஜ் மதுரையில் பிறந்தவர். இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் துறையில் பட்டப்படிப்பை முடிந்த அவர், லக்னோவில் உள்ள பிரசித்தி பெற்ற முகாமைத்துவ இந்திய நிறுவனத்தில் முதுநிலைப் பட்டம் பெற்றவர்.

அதன் பின்னர் ஊடகத்துறையைத் தேர்ந்தெடுத்த அவர் சென்னையில் இருந்து வெளியாகும் 'த ஹிண்டு' மற்றும் புதுடில்லியிலிருந்து வெளியாகும் 'த இண்டியன் எக்ஸ்பிரஸ்' இரண்டிலும் சுமார் ஆறு ஆண்டுகள் பத்திரிகையாளராகப் பணியாற்றியவர். பின்னர் 2015 ஆம் ஆண்டில் இந்திய வெளியுறவுச் சேவையில் இணைந்தார்.

அத்துறையில் புதுடில்லியிலும் ஆர்ஜென்ரீனாவின் புவனர்ஸ் அயர்ஸிலும் பணியாற்றினார். வெளியுறவுத் துறையில் நிர்வாகம், வர்த்தகம், கலாசாரம், பொதுசனத் தொடர்பாடல், வெளியுறவு பிரசாரப் பிரிவு ஆகியவற்றில் ஆக்கபூர்வமான பங்களிப்பை அவர் வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குருநகர் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளது.

இந்த மாதம் இப்பகுதியில் மொத்தம் நாற்பது பேரில் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையிலேயே இப்பகுதிகளை உடன் முடக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ள அதேநேரம் நாவாந்துறையில் இன்று 50 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## 433 பேர் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 42 ஆயிரத்து 347 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள 076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000
இணையம் - onlinekathir.com

## தீவிரமாகும் சர்வதேச அழுத்தம்

பாலுக்குக் காவலாகப் பூனையை நியமித்தால் எப்படியிருக்கும்?

அப்படி ஒரு வேலையை இலங்கையின், கோட்டாபய ராஜபக்ஷ அரசு முன்னெடுப்பது குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சலே பச்சலட் அம்மையார் கவலை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 47 ஆவது அமர்வின் ஆரம்பத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கவலை வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கையில் மிக மோசமான விளைவுகளுடன் நடந்து முடிந்த யுத்தத்தின் இறுதிச் கட்டத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் குறித்து, சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நீதி விசாரணை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, குற்றமிழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தும் வகையில் பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தி, இழப்பீடுகளைத் தாமதிக்காமல் வழங்க வேண்டும் என சர்வதேசம் கொழும்பு ஆட்சிப் பீடத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி, இப்போது அதையும் தாண்டி கழுத்தை நெரிக்கும் வகையில் இறுக்கியும் வருகின்றது.

ஜெனீவாவில் தற்போது நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தற்போதைய கூட்டத் தொடருக்கு முந்தைய தொடரில் – கடந்த மார்ச்சில் – கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கூட இதனையே மீளவும் வலியுறுத்தி நிற்கின்றது.

மனித உரிமைகளைப் பேணும் வகையில் சர்வதேச நியமங்களுக்கு அமைவான நடவடிக்கைகளை எடுக்குமாறு சர்வதேசம் வலியுறுத்த, அதை மீறும் வகையிலான நடவடிக்கைகளையே கொழும்பு தொடர்ந்து வருவதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பச்சலட் அம்மையார் விசனம் தெரிவிக்கின்றார்.

மனித உரிமைகளைப் பேணும் ஒரு நடவடிக்கையாகக் காட்டப்பட்டதே காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம்.

மனித உரிமைகள் பாதிக்கப்பட்ட விடயங்களில் ஆள்கள் காணாமலாக்கப்பட்டமை ஒரு முக்கிய அம்சம். பல்லாயிரக் கணக்கானோர் சட்டத்துக்கு முரணான வழியில் வலிந்து கடத்தக்கட்டு பின்னர் காணாமலாக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் தொடர்பிலும் நீதியான விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதுதான் சர்வதேசத்தினதும் நீதி வேண்டுவோரினதும் எதிர்பார்ப்பு.

அத்தகைய திசையில் ஒரு நடவடிக்கை என்ற பெயரிலேயே – கண்துடைப்பு விவகாரம் போல – இலங்கையில் காணாமல் போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டது. அதற்கான நிதி ஒதுக்கீடுகளும் வழங்கப்பட்டன. ஆனால் அந்த அலுவலகத்தின் செயற்பாடுகளை ஒட்டி, அதிகாரங்களைப் பிடுங்கி, பல் இழந்த பாம்பு போல அதைக் கைவிட்டிருக்கின்றது கோட்டாபய அரசு.

அது மாத்திரமல்ல, வன்னியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களில் பொலிஸ் தரப்பு மீதும் பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. அந்த விடயங்களில் கட்டளைச. சங்கிலி ஒழுங்கின்படி – பொறுப்புக் கூறல் கடப்பாட்டின் அடிப்படையில் – வகை கூற வேண்டிய முன்னாள் பொலிஸ் மா அதிபரை இந்தக் காணாமல் போனோர் அலுவலகச் செயற்பாட்டுக்குப் பொறுப்பாக நியமித்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய.

இது, கள்ளனைப் பிடித்து, தலையாரியாக நியமித்து, களவைக் கண்டுபிடிக்குமாறு கேட்ட கதையை ஒத்தது. அதையே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் விசனத்துடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படல், அதன் கீழ் பல நூற்றுக் கணக்கானோருக்கு தொடர்ந்தும் அநீதி இழைக்கப்பட்டு வருகின்றமை, குறிப்பாக சிறுபான்மையினரான தமிழர்களும் முஸ்லிம்களும் இந்தச் சட்டத்தின் கீழ் வதைக்கப்படுகின்றமை, பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படுகின்றவர்கள் பின்னர் ‘பொலிஸ் என்கவுண்டர்ஸ்’ என்ற பெயரில் சுட்டுக் கொல்லப்படுகின்றமை குறித்தெல்லாம் தமது ஆரம்ப உரையில் மனித உரிமைகள் ஆணையாளர் விசனம் தெரிவிக்கின்றார்.

இந்தக் குற்றச்சாட்டுகளை ஒட்டி எழுந்து வரும் சர்வதேச அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க முடியாது சில சமாளிப்பு நடவடிக்கைகளை – ஒப்பாசார செயற்பாடுகளை – கொழும்பு எடுத்தாலும், அவை சர்வதேசம் இலங்கை தொடர்பாகக் கொண்டுள்ள சீற்றத்தைத் தணிக்கப் போதுமானவையா என்பது தெரியவில்லை.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் சர்வதேசத்தின் எதிர்பார்ப்புக்கு அமைய சில ஷரத்துக்களை மாற்றவிருப்பதான சில சமிக்ஞைகளை கொழும்பு அரசு பிரதிபலித்தாலும், அத்தகைய யோசனைத் திட்டத்தை முன்னெடுக்கும் ஒழுங்கான நகர்வு எதனையும் அது கோடி காட்டவில்லை.

இத்தகைய பின்புலத்தில் சர்வதேசத்தை சமாளிக்கும் கொழும்பின் தற்போதைய நகர்வுகள் வெற்றியளிக்குமாப் போல தெரியவில்லை. சர்வதேசத்தின் கடுமையான செயற்பாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாயம் கொழும்புக்கு ஏற்பட்டு வருவது உறுதி.

# ரணிலுக்கு அருகில் நான் அமரமாட்டேன்

## அநுரகுமார பிடிவாதம்



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அருகில் நாடாளுமன்றத்தில் அமர முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு நேற்று வருகைதந்தார்.

இந்தநிலையில், ரணில் விக்கிரமசிங்கவின் ஆசனம் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அடுத்ததாக ஒதுக்கப்பட்டது.

எனினும், ரணில் விக்கிரமசிங்கவுக்கு அருகில் அமர முடியாது எனக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

தனது ஆசனத்தை அத்துரலியே ரத்தன தேரர் அல்லது இரா. சம்பந்தன் ஆகியோரது ஆசனத்துக்கு அருகில் மாற்றம் செய்ய வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்

இல்லையெனில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆசனத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அருகில் மாற்றுமாறும் யோசனை முன்வைத்தார்.

இந்தநிலையில், எதிர்க்கட்சி வரிசையின் முன்வரிசையில் 13 ஆவது ஆசனம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒதுக்கப்பட்டது.

# 24 லட்சத்து 87 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொவிட் தடுப்பூசியின் முதல் டோஸ் போடப்பட்டது

இலங்கையில் இதுவரை 24 லட்சத்து 87 ஆயிரத்து 297 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளதாகத் தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, நேற்றைய தினத்தில் மாத்திரம் 5 ஆயிரத்து 131 பேருக்கு சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரையில் 14 லட்சத்து 48 ஆயிரத்து 601 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்று 15 ஆயிரத்து 278 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளதாகத் தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரையில், 4 லட்சத்து 70 ஆயிரத்து 870 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டது.

இதேவேளை, நேற்றையதினம் 385 பேருக்கு கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரை 3 லட்சத்து 72 ஆயிரத்து 675 பேருக்கு கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டது.

இதேநேரம், நாட்டில் இதுவரை ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 454 பேருக்கு ஸ்புட்னிக் வீ தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளதாகத் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் நேற்றைய தினம் 22 பேருக்கு ஸ்புட்னிக் வீ தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பெறுமதிவாய்ந்த டயலைஸ் இயந்திரம் அன்பளிப்பு





கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு டயலைஸ் இயந்திரம் உபகரணம் ஒன்று நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

எதிர்க் கட்சித் தலைவரும். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவால் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் சரவணபவனிடம் நன்கொடையாக இந்த இயந்திரம் வழங்கப்பட்டது.

கொவிட் பெருந்தொற்று காரணத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்குச் சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குழு, அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள், உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்கள் ‘ஜன சுவய’ கருத்திட்டத்தில் இணைந்து கொண்டு எதிர்க் கட்சியிலிருந்து ஓர் மூச்சுத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தத் திட்டத்தினூடாக வழங்கப்பட்ட குறித்த உபகரணம் 23 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியானது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, சிரேஷ்ட பிரதித் தலைவர் ராஜித சேனாரத்ன, வைத்தியர் காவிந்த ஜயவர்தன, ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமாச் சந்திரா பிரகாஷ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், சித்தார்தன், சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகிய பிரதிநிதிகளும் கலந்துகொண்டுள்ளனர்.

# இலங்கைக்கு ஜூலையில் 78 ஆயிரம் பைசர் தடுப்பூசி

இலங்கை மருந்தக கூட்டுத்தாபனத்தால் மேலும் 78 ஆயிரம் பைசர் கொரோனா தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட தடுப்பூசிகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் மூன்று வாரத்திற்குள் இலங்கையை வந்தடையவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஈழத்தமிழ் அகதிகளின் வாரிசுகளின் மருத்துவக் கல்விக் கனவை தமிழ்நாடு அரசு நனவாக்க வேண்டும் – டாக்டர் ராமதாஸ் அறிக்கை

ஈழத்தமிழ் அகதிகளின் வாரிசுகளின் மருத்துவக் கல்வி கனவை தமிழ்நாடு அரசு உடனடியாக நனவாக்க வேண்டும் என்று டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார்.

'தமிழ்நாட்டில் ஈழத்தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட ஏராளமான கோரிக்கைகள் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் நிலையில், அவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கை உரிமைகூட கடந்த 20 ஆண்டுகளாக மறுக்கப்பட்டு வருகிறது. ஈழத்தமிழர்களின் தந்தை நாடு என்று கூறிக்கொள்ளும் தமிழ்நாடு இந்த வாய்ப்பைக்கூட வழங்க மறுப்பது அநீதியாகும்.

இலங்கையில் நடைபெற்ற போரால் பாதிக்கப்பட்டும் உயிருக்கு அஞ்சியும் இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு அகதிகளாக வந்துள்ளனர். 1980 ஆம் ஆண்டுகளில் தொடங்கிய அகதிகளின் வருகை 2009 ஆம் ஆண்டில் போர் முடிவடைந்த பிறகும் கூட நீடித்தது. இன்றைய நிலையில் தமிழகத்தில் உள்ள 108 அகதிகள் முகாம்கள் மற்றும் சிறப்பு முகாம்களில் 18,944 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்கள் தவிர முகாம்களுக்கு வெளியில் 13,533 குடும்பங்கள் சொந்த ஏற்பாட்டில் வாழ்ந்து வருகின்றன.

ஈழப்போரில் அனைத்தையும் இழந்து, தாயகத்திற்கு மீண்டும் செல்ல முடியாமலும், சென்றாலும் நிம்மதியாக வாழ முடியாத நிலையிலும் உள்ளவர்கள்தான் இன்னும் அகதிகளாக தமிழகத்தில் தங்கியுள்ளனர். அவர்களின் ஒற்றைக்கனவு தங்களின் குழந்தைகளுக்கு



நல்ல கல்வியைக் கொடுத்து வேலை வாய்ப்புக்கு தகுதியுள்ளவர்களாக்கிவிட வேண்டும் என்பதுதான்.

கலை மற்றும் அறிவியல், பொறியியல் உள்ளிட்ட படிப்புகள் அவர்களுக்கு சாத்தியமாகிவிட்டாலும், மருத்துவப் படிப்பு என்பது எட்டாக்கனியாகவே இருந்து வருகிறது. அதற்கு காரணம் ஈழத்தமிழர்களுக்கு மருத்துவப் படிப்பில் இடம் ஒதுக்கப்படாததுதான். கடந்த 20 ஆண்டுகளில் மருத்துவப் படிப்பில் சேருவதற்கு தகுதியான மதிப்பெண்களைப் பெற்றும் மருத்துவக் கல்லூரிகளில் சேர முடியாமல் ஏமாற்றமடைந்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை ஏராளம்.

அவர்கள் செய்த ஒரே பாவம் ஈழத் தமிழ் அகதிகளுக்கு வாரிசுகளாகப் பிறந்ததுதான். ஈழத் தமிழ் அகதிகளின் குழந்தைகளுக்கு மருத்துவம் படிப்பதற்கான வாய்ப்புகள் இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள், கனடா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் தாராளமாக வழங்கப்படுகின்றன. ஆனால், ஈழத்தமிழர்களின் தந்தை நாடான தமிழ்நாட்டில் அந்த வாய்ப்பு மறுக்கப்படுவது அநியாயமாகும்.

ஈழத்தமிழ் அகதிகளின் வாரிசுகளுக்கு மருத்துவப் படிப்பில் இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை கடந்த 20 ஆண்டுகளாக பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்திவருகிறது. பிற அரசியல் கட்சிகளும் இந்தக் கோரிக்கையை முன்வைத்தாலும் கூட இதுவரை அக்கோரிக்கை நிறைவேறவில்லை. மருத்துவப் படிப்பில் ஈழத்தமிழ் அகதிகளின் வாரிசுகளுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பது நிறைவேற்ற முடியாத கோரிக்கை அல்ல. அது நிறைவேற்றப் படக்கூடாத ஒன்றும் அல்ல.

ஆனால், அந்தக் கோரிக்கையை செயல்படுத்தும் அரசியல் துணிச்சல் தான் தமிழக ஆட்சியாளர்களுக்கு இல்லை. 1980 களின் தொடக்கத்தில் தான் ஈழத்தமிழ் அகதிகள் தமிழ்நாட்டுக்கு வரத் தொடங்கினார்கள். 1984 ஆம் ஆண்டில் ஈழத்தமிழ் அகதி மாணவர்களுக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்புகளில் தலா 10 இடங்கள், சட்டம் மற்றும் வேளாண் படிப்புகளில் தலா 5 இடங்கள், பாலிடெக்னிக்குகளில் 20 இடங்களை சிறப்பு ஒதுக்கீடாக வழங்கி அப்போதைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர் ஆணையிட்டார்.

அதன்பின் 1989 ஆம் ஆண்டில் அகதி மாணவர்களுக்கு கல்விக்கட்டணத்திலிருந்து அப்போதைய முதல்வர் கலைஞர் விலக்கு அளித்தார். ஆனால், 1990 களின் தொடக்கத்தில் அகதி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஒதுக்கீடுகளை நீதிமன்றம் ரத்துச் செய்தது. அதன்பின் பொறியியல் படிப்புக்கு மீண்டும் சிறப்பு ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டாலும்கூட மருத்துவக் கல்விக்கு மட்டும் 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் சிறப்பு ஒதுக்கீடு வழங்கப்படவில்லை. இதனால், அகதி மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு வழங்கப்படுவதில் பெரும்பான்மையான உதவிகள் ஈழத்தமிழ் அகதிகளுக்கும் வழங்கப்படுகின்றன. அவ்வாறு இருக்கும் போது மருத்துவக் கல்வி வாய்ப்பு மட்டும் மறுக்கப்படுவது எந்த வகையிலும் அறமல்ல. அதிலும் கடந்த சில ஆண்டுகளாக மருத்துவப் படிப்பில் சேர விரும்பும் ஈழத் தமிழ் அகதிகளின் வாரிசுகளில் பெரும்பான்மையானோர் தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்தவர்கள் ஆவர்.

இந்தியாவில் வசிக்க விரும்பும் ஈழத் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை பெற்றுத் தரப்படும் என்று 2021 தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையில் தி.மு.க. வாக்குறுதி அளித்துள்ளது. அதை சாத்தியமாக்க நீண்டகாலம் ஆகலாம். ஆனால், ஈழத்தமிழ் அகதிகளின் வாரிசுகளுக்கு மருத்துவக் கல்வி பயில சிறப்பு ஒதுக்கீடு வழங்குவது சாத்தியமானதுதான். தமிழ்நாட்டில் இதை எவரும் எதிர்க்கவும் மாட்டார்கள்.

எனவே, தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கையில் ஈழத்தமிழ் அகதிகளின் வாரிசுகளுக்கு குறிப்பிட்ட அளவு இடங்களை சிறப்பு ஒதுக்கீடாக வழங்க வேண்டும். எத்தனை இடங்கள் என்பதை தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழ் அகதி மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப முடிவு செய்யலாம். இதற்கான சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டு ஈழத்தமிழ் அகதிகளின் வாரிசுகளின் மருத்துவக் கல்விக் கனவை தமிழ்நாடு அரசு உடனடியாக நனவாக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்' என்று டாக்டர் ராமதாஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பட்ஜெட் கூட்டத் தொடரில் வேளாண் சட்டங்களுக்கு எதிராக தீர்மானம் மு.க.ஸ்டாலின் உறுதியளிப்பு

'இந்திய மத்திய அரசு கொண்டு வந்துள்ள வேளாண் சட்டங்கள் மற்றும் குடியுரிமைச் சட்டத்தை எதிர்த்து, அடுத்துவரும் பட்ஜெட் கூட்டத் தொடரில் தீர்மானம் நிறைவேற்றப்படும்' என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

தமிழக சட்டமன்றக் கூட்டத் தொடரில், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய மானாமதுரை தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி, 'வேளாண் பெருமக்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் மத்திய அரசு கொண்டு வந்துள்ள மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தார். அப்போது விளக்கமளித்துப் பேசியபோது



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், வேளாண் சட்டங்கள் நிறைவேற்றப்பட்ட நாள் முதல் அந்த சட்டங்கள் திரும்பப் பெறவேண்டும் என மத்திய அரசை பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி வருவதாகக் கூறினார்.

தமிழகம் மட்டுமல்லாது இந்தியா முழுவதுமுள்ள உழவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு சட்டங்களை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்ற தமிழக அரசு உறுதியாக இருப்பதாகவும் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். ஆனால் ஆளுநர் உரை மீதான விவாதம் தற்போது நடைபெற்று வருவதால், எதிரான தீர்மானமொன்றை நிறைவேற்றுவது மரபுக்கு விரோதமாக இருக்கும் என்பதால் வரும் பட்ஜெட் கூட்டத்தொடரில் மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றப்படும் என அவர் உறுதியளித்தார்.

மேலும், சிறுபான்மையின மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கும் குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராகவும் தீர்மானம் நிறைவேற்றப்படும் எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## செருப்பு அணியாமல் தமிழக சட்டசபைக்கு வந்த பா.ஜ.க எம்.எல்.ஏ. எம்.ஆர்.காந்தி



தனது 75ஆவது வயதில் முதல்முறையாக எம்.எல்.ஏ யாகத் தேர்வானவர் பா.ஜ.க.வைச் சேர்ந்த எம்.ஆர்.காந்தி. இவர், 1980 அல் இருந்து 7 முறை போட்டியிட்டு, முதல் முறையாக தற்போது நாகர்கோவில் தொகுதியில் வெற்றி பெற்று தமிழக சட்டமன்ற உறுப்பினராகியுள்ளார்.

இவர், தற்போது நடைபெற்று வரும் தமிழக சட்டமன்றக் கூட்டத் தொடரில் பங்குபெற செருப்பு அணியாமல் வருவதால் மீண்டும் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

பா.ஜ.க. சார்பில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து இதுவரை இருவர் மட்டுமே பா.ஜ.க. சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருக்கின்றனர். ஒருவர் சி. வேலாயுதம், இவர் 1996 தேர்தலில் வெற்றிபெற்றார். மற்றொருவர் எம்.ஆர்.காந்தி, 2021 சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்.

பா.ஜ.க.வின் தாய் இயக்கமான ஜனசங்கத்தின் மாவட்டத் தலைவராக 1967 ஆம் ஆண்டிலேயே பொறுப்பு வகித்தவர் எம்.ஆர்.காந்தி. 1975 இல் மிசாவில் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்தவர். ஜனசங்கம் பா.ஜ.க. வாக மாறியபோது 1980 இல் ஒருங்கிணைப்புக்குழுவில் இடம்பெற்றவர். 2001 இல் மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினராக ஆனார்.

இவர், செருப்பு அணியாமல் தமிழக சட்டசபைக்கு வந்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார். பொதுவாக செருப்பு அணியாமல் நடப்பதையே வழக்கமாகக் கொண்டவரான எம்.ஆர்.காந்தி, தேர்தல் பிரச்சாரத்தின் போதும் செருப்பு அணியாமலேயே பயணித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மூன்றாவது அலையை எதிர்கொள்ள அரசு தயாராக வேண்டும் வெள்ளை அறிக்கையை வெளியிட்டு ராகுல்காந்தி பேட்டி

இந்தியாவில் கொரோனாப் பாதிப்புக் குறித்த வெள்ளையறிக்கையை காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி வெளியிட்டார். அப்போது, 'பிரதமரின் கண்ணீர் கொரோனாவால் இறந்தவர்களைக் காப்பாற்றியிருக்காது. ஒக்சிஜன் காப்பாற்றியிருக்கும்!' என அவர் தெரிவித்திருக்கிறார்.

காணொலி தொடர்பாடல் வாயிலாகப் பேட்டியளித்த ராகுல் காந்தி, 'கொரோனா முதல் மற்றும் இரண்டாவது அலையில், நாட்டில் பேரழிவு ஏற்பட்டது. இது அனைவருக்கும் தெரியும். இதற்கான காரணத்தை நாம் கண்டறியவேண்டும். வைரஸ் தொடர்ந்து உருமாற்றம் அடைவதால், மூன்றாவது அலையைத் தொடர்ந்து மேலும் பல அலைகள் வரும் என்றும் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். நானும் இதைத்தான் கூறுகிறேன்.

எனவே, நாம் கவனமாக இருக்க வேண்டும். மத்திய அரசைக் குறை சொல்வதற்காக இந்த வெள்ளை அறிக்கையை வெளியிடவில்லை. கொவிட் மூன்றாவது அலையை எதிர்கொள்ள நாட்டிற்கு உதவுவதற்காகவே வெளியிட்டுள்ளோம்.

கொரோனாவின் இரண்டாவது அலை வீசியபோது பிரதமர் மோடி அதைக் கருத்தில் கொள்ளாமல் மேற்கு வங்கத் தேர்தலில் கவனம் செலுத்தினார். கொரோனா இரண்டாவது அலையின்போது ஒக்சிஜன் மற்றும் மருத்துவ சேவை கிடைக்காமல் பலர் உயிரிழந்தனர். பிரதமரின் கண்ணீர் கொரோனாவால் இறந்தவர்களைக் காப்பாற்றியிருக்காது. ஆனால், ஒக்சிஜன் காப்பாற்றியிருக்கும். கொரோனாவால் உறவினர்களை இழந்தோரின் கண்ணீரை பிரதமரின் கண்ணீர் மட்டும் துடைக்காது.

தடுப்பூசி செலுத்துவது மிகவும் முக்கியம். தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை வேகப்படுத்த வேண்டும். அனைவருக்கும் தடுப்பூசி செலுத்த வேண்டும். மூன்றாவது அலையை எதிர்கொள்ள அரசு தயாராக வேண்டும். மருத்துவமனைகள், ஒக்சிஜன் படுக்கைகளைத் தயார்படுத்த வேண்டும்!' என்று குறிப்பிட்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# மும்பை தாக்குதல் குற்றவாளி ராணாவை நாடு கடத்தும் வழக்கு நாளை விசாரணை



கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், மும்பையில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 6 அமெரிக்கர்கள் உட்பட 166 பேர் பலியானார்கள். இதில் முக்கிய குற்றவாளியான ஹெட்லி, அமெரிக்காவில் பிடிபட்டார். அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டு சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார்.

அவருடைய நண்பரும், கனடா குடியுரிமை பெற்ற பாகிஸ்தான் தொழிலதிபருமான தஹாவுர் ராணாவுக்கும் இந்த வழக்கில் தொடர்புள்ளது. அவர் இந்தியாவால் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப் பட்டுள்ளார்.

இந்தியாவின் வேண்டுகோளின் பேரில், அமெரிக்காவில் ராணா கைது செய்யப்பட்டார். அவரை இந்தியாவுக்கு நாடுகடத்த அமெரிக்க அரசு ஒப்புக்கொண்டது. ஆனால், அதை எதிர்த்து அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டில் ராணா வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில், நாளை (வியாழக்கிழமை) நீதிமன்றில் நேரடி விசாரணை நடைபெறுகிறது. இதையொட்டி, இந்திய அதிகாரிகள் அமெரிக்காவுக்கு சென்றுள்ளனர்.



# வட கொரியாவில் ஒருவருக்குக் கூட கொரோனா இல்லை சந்தேகத்தில் W.H.O

தங்கள் நாட்டில் ஒருவருக்குக் கூட கொரோனாத் தொற்று இல்லை என உலக சுகாதார அமைப்பிடம் வட கொரியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக உலக சுகாதார அமைப்பிடம், வட கொரியா அளித்துள்ள அறிக்கையில், ஜூன் 10 ஆம் திகதி வரை அறிகுறிகளுடன் இருந்த 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களைச் சோதனை செய்ததாகவும், அதில் யாருக்கும் தொற்று கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் மோசமான சுகாதாரக் கட்டமைப்பு, சீனாவுடன் எல்லைப் பகிர்வு, எந்த ஒரு பொருளாதாரத் தேவைக்கும் சீனாவைச் சார்ந்திருக்கும் வடகொரியாவில் கொரோனாத் தொற்று இல்லாதமை சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உலக சுகாதாரத்துறை அதிகாரிகள் ஐயம் எழுப்பியுள்ளனர்.

# ஜோ பைடனை சந்திக்கவோ பேச்சு நடத்தவோ மாட்டேன்

## ஈரான் புதிய அதிபர்



ஈரான் அதிபா தேர்தலில் பிரம்மாண்ட வெற்றியைப்பெற்றதலைமை நீதிபதி இப்ராஹிம் ரைசி, டெஹ்ரானில் செய்தியாளாகளை சந்தித்தார்.

அப்போது அவரிடம் செய்தியாளர்கள் அமெரிக்க அதிபர் ஜோ பைடனைச் சந்திக்கும் வாய்ப்பு உள்ளதா எனக் கேட்டபோது, இல்லை. ஜோ பைடனை சந்திக்கவோ, பேச்சு நடத்தவோ மாட்டேன் என்றார்.

மேலும், ஈரானுக்கு எதிரான அனைத்து அடக்குமுறை தடைகளையும் நீக்க அமெரிக்கா கடமைப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

# மீண்டும் வானில் ஜெட் எயார்வேஸ்

முடங்கிஉள்ளஜெட்ஏர்வேஸ்நிறுவனத்தை மீண்டும் இயக்கும் திட்டத்திற்கு NCLT எனப்படும் தேசிய நிறுவனங்கள் சட்ட தீர்ப்பாயம் அனுமதி வழங்கி உள்ளன.

லண்டனில் உள்ள கார்லாக் கேபிடல் (Kalrock Capital) மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள தொழிலதிபர் முராரி லால் ஜலான் ஆகியோர் கூட்டாக ஜெட் ஏர்வேஸ் நிறுவனத்தை இயக்க முன்வந்துள்ளனர்.

இந்தத் திட்டத்துக்கு அனுமதி வழங்கிய NCLT, ஜெட் ஏர்வேஸ் விமானங்களுக்கான பயண ஸ்லாட்டுகளை 90 நாட்களுக்குள் ஒதுக்க டிஜிசிஏ - வுக்கு உத்தரவிட்டுள்ளது. கடன் சுமை காரணமாக 2019 ஏப்ரலில் ஜெட் ஏர்வேஸ் முடங்கியது.

அதன் பெரும்பாலான முக்கிய பயணத் தடங்கள் அனைத்தும் இதர விமான நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு விட்டன. எனினும் இந்த ஆண்டு இறுதியில் 20 தடங்களில், 20 சிறிய மற்றும் 5 பெரிய விமானங்களுடன் அதன் சேவை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.






## வரும் திங்கள் முதல்

# முகக்கவசம் அணியத் தேவை இல்லை இத்தாலி அரசாங்கம் அதிரடி அறிவிப்பு

இத்தாலி நாட்டு மக்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கள் முதல் முகக் கவசம் அணிய வேண்டியதில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்நாட்டு சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் – கொரோனா பாதிப்பு குறைந்த பகுதிகளில் முகக்கவசங்களை அணிவதில் இருந்து பொதுமக்களுக்கு விலக்கு அளிக்கப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் கொரோனா பாதிப்பு அதிகம் உள்ள ஆஸ்டா பள்ளத்தாக்கு பகுதிகளுக்கு அரசின் இந்தத் தளர்வுகள் பொருந்தாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிலிப்பைன்சில் கொரோனாத் தடுப்பூசியை போடுவதக்கு மறுத்தால் சிறைத் தண்டனை

## அதிபர் எச்சரிக்கை

பிலிப்பைன்ஸ் நாட்டின் அதிபர் ரோட்ரிகோ துதர்தே சர்ச்சைகளுக்கு பெயர் போனவர். சிறிய குற்றங்களுக்கும் கடுமையான தண்டனைகளை வழங்க வேண்டும் என்கிற சர்வாதிகாரப் போக்கு மனம் உடையவர்.

அண்மையில் கூட கொரோனா ஊரடங்கு கட்டுப்பாடுகளை மீறி தேவையின்றி வீதிகளில் சுற்றித்திரியும் நபர்களை சுட்டுக்கொல்ல பொலிஸாருக்கும், ராணுவத்துக்கும் அனுமதி வழங்கி நாட்டு மக்களை கதிகலங்க வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக தற்போது நாட்டில் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்ள மறுக்கும் நபர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும் என அறிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸில் இதுவரை 13 லட்சத்து 67 ஆயிரத்து 894 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்



பட்டுள்ள நிலையில், 23 ஆயிரத்து 809 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

அங்கு கொரோனா வைரஸ் 2 ஆவது அலை உருவாகும் அபாய சூழல் உள்ள நிலையில் தடுப்பூசி செலுத்தும் பணிகளை அரசு தீவிரமாகச் செயற்படுத்தி வருகிறது.

ஆனால் 11 கோடி மக்கள் தொகை கொண்ட பிலிப்பைன்ஸில் இதுவரை 21 லட்சம் பேர் மட்டுமே தடுப்பூசி போட்டுக்கொண்டார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சூழலில்தான் தடுப்பூசி போட்டுக்கொள்ள மறுப்பவர்களுக்கு சிறைத் தண்டனை என்கிற அறிவிப்பை அதிபர் ரோட்ரிகோ துதர்தே வெளியிட்டுள்ளார். தொலைக்காட்சி வாயிலாக நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் அவர் கூறியவை வருமாறு:-

என்னை தவறாக எண்ணாதீர்கள். நாட்டில் ஒரு நெருக்கடி நிலவுகிறது. தேசிய அவசர நிலை உள்ளது. எனவே தடுப்பூசியா அல்லது சிறையா என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். நீங்கள் தடுப்பூசி போட விரும்பவில்லை என்றால் நான் உங்களை கைது செய்வேன். பின்னர் நானே உங்களுக்கு ஊசி போடுவேன். நீங்கள் தடுப்பூசி போட விரும்பவில்லை என்றால் பிலிப்பைன்ஸை விட்டு வெளியேறுங்கள். இந்தியா அல்லது அமெரிக்கா எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள். ஆனால் பிலிப்பைன்ஸில் இருந்தால் நீங்களே தடுப்பூசி போட்டுக்கொள்ளுங்கள்.-

இவ்வாறு அவர் கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பழைய வழக்குகளை விசாரிப்பதற்கு பொறிமுறையை உருவாக்கவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன்



பழைய வழக்குகளை விசாரிப்பதற்கு ஒரு பொறி முறையை உருவாக்கவேண்டும் அதில் மாற்றுக் கருத் துக்களுக்கு இடமில்லை எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் சாணக்கியன், கடந்த ஒரு மாதத்துக்குள் 100இற்கு மேற்பட்டவர்கள் புதிதாகக் கைது செய்யப்பட் டுள்ளனர். அவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாத விவா தத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்ட பிள்ளையான், பிணையில் விடுதலை செய்யப் பட்டுள்ளார். அவருக்கு சொத்துக்கள் இருக்கின்றன. அரசாங்கத்துக்கு ஆதரவானவர், ஆளும் கட்சியில் அங் கம் வகிக்கின்றார். ஆனால், பேஸ்புக்கில் ஏதாவது எழுதி யதற்காக, கடந்த ஒரு வருடத்தில் 100இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் பெற்றுக்கொடுப் பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். பிள்ளையா னுக்குபிணைவழங்கியதைப்போல,பிள்ளைகளுக்கும் பிணை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவும் என்றும் கோரிக்கை முன்வைத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் ஐந்து வருடங்களுக்கும் மேலாகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள்கட்சியின்தலைவரும்தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான பிள்ளையான் என அறியப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், பிணை யில் விடுக்கப்பட்டார். அத்துடன், அவருக்கு எதிரான வழக்கும் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பி டத்தக்கது.

## தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட நபர்

சம்மாந்துறை பொலிஸ் பிரிவு மற்றும் சம்மாந் துறை பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழுள்ள சம் மாந்துறை உடங்கா 02, 14ஆம் வீதியைச் சேர்ந்த 34 வயதுடைய அப்துல் றஹீம் சியாத் என்பவர் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டார்.

மரணத்துக்கான காரணம் மற்றும் மரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மாமியாரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த மருமகன்

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில், மாமியாரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த மருமகனை எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திரு கோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டது.

திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதிவான் பயாஸ் றஸ்ஸாக் முன்னிலையில் நேற்று குறித்த சந்தேக நபரை ஆஜர்படுத்திய போதே இந்தக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் திருகோணமலை, கிளிகுஞ்சுமலை பகுதியைச்சேர்ந்த ஹெட்டியாராய்ச்சிலாகே கருணாபால (வயது 56) எனவும் தெரியவருகின்றது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

மேற்படி சந்தேக நபர் தனது மனைவியின் தாயா ரான 70 வயதுடைய பெண்ணை மது போதையில் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என உப்பு வெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டது.

இந்நிலையில் இந்தப் பெண் திருகோண மலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் நிலையில் சந்தேக நபரை கைது செய்து திரு கோணம லை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கிளிக்குஞ்சு மலை பகுதியில் கள்ளச்சாராயம் உற் பத்தி மற்றும் போதைப்பொருள் விற்பனை போன்ற செயற்பாடுகள் அதிகளவில் இடம்பெற்று வருகின்ற நிலையில் சிவில் உடைகளில் பொலிஸார கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மண் காசு வாங்கப்போனவரை கூப்பிட்டு சுட்டுக்கொன்றனர்

### வியாழேந்திரனின் காவலர் செய்த அராஜகம் - சகோதரி கதறல்

தவறுதலாக சுட்டிருந்தாலும் பரவாயில்லை கையை விசுக்கி கூப்பிட்டு, வேண்டுமென்றே சுட்டுஎனதுசகோதரரை கொன்று விட்டார் , இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் மெய்ப் பாதுகாவலரால் சுட்டுப் படு கொலைச்செய்யப்பட்ட மகாலிங் கம் பாலசுந்தரத்தின் சகோதரி கதறியழுதார்.

சம்பவம்தொடர்பில்தெரிவித்த அவர் -

இரண்டொரு நாள்களுக்கு முன்னர், மண் ஏற்றிச்சென்று எனது சகோதரர் வீடொன்றுக்கு கொட்டிக்கொண்டிருந்தார். அப் போது அங்கு வந்த மெய்ப்பாது காவலர், தாங்கள் போகவேண் டும், லொறியை எடுக்குமாறு கேட்டுள்ளார். கொஞ்சம் இருங்கோ, மண்ணை இறக்கி விட்டு செல்கின்றோம் என எனது சகோதரர் தெரிவித்துள்ளார்.

அப்போது டயரை வெட்டி போட்டு விட்டனர். ஆனால், என் சகோதரர் திரும்பிவிட்டார். இறக் கிய மண்ணுக்கான காசை வாங்கதான் சென்றார். அதற்கி டையில், கையை விசுக்கி கூப் பிட்டு என் சகோதரரை சுட்டுக் கொன்றுவிட்டார் என கதறியழு தார்.

## தேவபுரத்தில் மக்களால் கவனவீர்ப்பு போராட்டம்

மட்டக்களப்பு கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேவபுரத்தில் பி தேச மக்களால் கவனவீர்ப்பு போராட் டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அரச காணியை தனி நபர் ஒருவர் சுவீகரிக்கும் நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ளார் என தெரிவித்து அதனைத் தடுத்து நிறுத்துமாறும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத் தில் மக்கள் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை மேற்படி காணிக் குள் ஒன்று கூடிய மக்கள், கையில் சுலோகங்கள் எழுதிய பதாதை களைக் கையில் ஏந்தியவாறும் கோஷங்கள் எழுப்பியவாறும் சமூக இடைவெளியைப் பேணி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி னர்கள்.

'அரச சம தர்மம் செத்து விட் டதா? நீதி நிலை நாட்டப்படுமா?, 'நித்தம் நித்தம் ஏழை மக்களுக்கு போராட்டம் தானா?., 'அரசியல் வாதியே இதற்கான தீர்வு பெற்றுத் தர வேண்டும்.' - என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகை களை கையில் ஏந்தியிருந்தனர்.

## திருகோணமலை மற்றும் மட்டக்களப்பில் சில பகுதிகள் இன்று தனிமைப்படுத்தல்

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில பகுதி கள் இன்று காலை 6 மணிமுதல் தனிமைப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி, திருகோணமலை மாவட்டத்தின் திருகோணமலை பொலிஸ் அதிகாரப் பிரிவுக்குட்பட்ட நாகராஜ வலவ்வ கிராம சேவ கர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை காவல் துறை அதிகாரப்பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை கிராம சேவகர் பிரிவின் முதலாம் மற்றும் இரண்டாம் குறுக்கு வீதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காத்தான்குடி பொலிஸ் அதிகாரப் பிரி வுக்குட்பட்ட காத்தான்குடி பிரிவு 4, காத்தான்குடி பிரிவு 5 தெற்கு, காத்தான்குடி பிரிவு 6 மேற்கு, புதிய காத்தான் குடி பிரிவு வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

காத்தான்குடி பொலிஸ் அதிகாரப்பிரிவுக்குட்பட்ட கர்பலா வீதி, ஏ.எல்.எஸ். மாவத்தை, நூரானியா பொது மயான வீதி மற்றும் கடற்கரை வீதி என்பனவும் தனி மைப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடந்த 24 மணி நேரத்தில் 211 பேருக்குக் கொரோனா

மட்டக்களப்பில் கடந்த 24 மணி நேரத்தில் 211 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித்துள்ளார்.

மேலும் பெரியகல்லாறு பகுதியிலேயே அதி களவான வைரஸ் தொற்றாளர்கள் அடை யாளம் காணப்படுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக வைத்தியர் நா.மயூரன் மேலும் கூறியவை வருமாறு -

பெரிய கல்லாறு பகுதியில் நேற்று முன் னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளில் 22பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் பெரியகல்லாறு 2ஆம், 3ஆம் கிராம சேவையாளர் பிரிவுகள் தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்டு, அன்டிஜன் சோதனை கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என சுகா தார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பில் கடந்த 24மணி நேரத்தில் 211 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் 3 மர ணங்களும் இடம்பெற்றுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மட்டக்களப்பு கொக்குவில் வீதி செப்பனிடும் பணிகள் ஆரம்பம்

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட கொக்குவில் 1ஆம் குறுக்கு வீதி முதற்கட்டமாக கொங்கிறீட் வீதியாக செப்பனிடும் பணிகள் இன்று ஆரம்பித்து வைக் கப்பட்டன.

மட்டக்களப்பு மாநகர சபையின் கொக்குவில் வட்டார உறுப்பினர் க.ரகுநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர முதல்வர் எஸ்.சரவணபவன், மாநகர உறுப்பினர்களான எஸ்.ஜெயா, எஸ்மதன், பொறியி யலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டம் மட்டக்களப்பு மாநகர சபையின் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் முதற்கட்டமாக



கொங்கிறீட் வீதியாக செப்பனிடப்படுவதாக மட்டக்களப்பு மாநகரசபையின் உறுப்பினர் க.ரகுநாதன் தெரிவித்தார்.

# கோபா அமெரிக்கா கால்பந்தாட்டம் காலிறுதிச் சுற்றுக்குள் நுழைந்தது ஆர்ஜென்டினா!



தென்னமெரிக்கக் கால்பந்தாட்டத் திருவிழாவான கோபா அமெரிக்கா தொடரில் பராகுவேயை 1-0 என்று போராடி வீழ்த்திய ஆஜென்டீனா, காலிறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றது. நட்சத்திர வீரர் மெஸ்ஸிக்கு இது அவரது 147 ஆவது சாதனைப் போட்டியாக அமைந்தது.

பிரேஸிலியாவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பெற்ற வெற்றியின் மூலம், 2019 இல் கோபா அமெரிக்கா தொடரின் அரையிறுதியில் தோற்றதற்குப் பின்னர், கோபா தொடரில் 16 போட்டிகளில் தொடர்ச்சியாக தோல்வியடையாத சாதனையை ஆஜென்டீனா ஏற்படுத்தியிருக்கிது.

பிரிவு ஏ-யில் 7 புள்ளிகளுடன் முதலிடத்தில் ஆஜென்டீனாவும் சிலி அணி 2 ஆம் இடத்திலும் உள்ளன. பராகுவே அணி 3 ஆம் இடத்திலும் உருகுவே அணி 4 ஆம் இடத்திலும் இருக்க, பொலிவியா அணி புள்ளிகளே இல்லாமல் கடைசி இடத்தில் உள்ளது.

ஆஜென்டீனாவுக்கான ஒரே கோலை 10 ஆவது நிமிடத்தில் டரியோ கோம்ஸ் அடித்திருந்தார். அஞ்செல் டி மரியா மிகப்பிரமாதமாக பந்தைக் கொடுக்க, கோம்ஸ் அதனை பராகுவே கோல் காப்பாளரைக் கடந்து கோலாக்கியிருந்தார். போட்டி முடிந்ததும் ஊடகவியலாளர்களைச் சந்தித்த கோம்ஸ், அஞ்செல் டி மரியாவின் பாஸ் மிக அருமை நான் வெறுமனே தொட்டால் போதுமாக இருந்தது என்று பாராட்டியிருந்தார்.

ஆஜென்டீனா அணிக்காக 147 ஆவது போட்டியை விளையாடிய மெஸ்ஸி, ஜவியர் மஸ்ச் செரானோவின் சாதனையைச் சமன் செய்தார்.

# யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் உக்ரைனை வென்று ஒஸ்திரியா அடுத்த சுற்றுக்குள்!



யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் பிரிவு சி போட்டியொன்றில் உக்ரைன் அணி ஒஸ்திரியா அணியிடம் 1-0 என்ற கோல் கணக்கில் தோல்வியுற்றது. இதன் மூலம் ஒஸ்திரியா அணி 2 வெற்றிகளில் 6 புள்ளிகளுடன் 16 அணிகள் கொண்ட நொக்-அவுட் சுற்றுக்கு முன்னேறியது. 21 ஆவது நிமிடத்தில் ஒஸ்திரியாவின் கிறிஸ்டோ பொம் கார்ட்னர் அடித்த கோல்தான் அந்த அணியின் வெற்றிக்கான ஒரே கோலாக அமைந்தது.

நெதர்லாந்துக்கு எதிராக 2-3 என்று கடும் நெருக்கடி கொடுத்த உக்ரைன், அதன் பிறகு கடுமையான சவாலை வழங்கிய வட மசிடோனியாவை வீழ்த்தி இறுதி 16க்குள் நுழைவதற்கான வாய்ப்பை அதிகரித்திருந்தது. ஆனால், இந்தப் போட்டியில் ஏற்பட்ட தோல்வியின் மூலம் உக்ரைன் அணி பிரிவு சி யில் 3 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டு, அடுத்த சுற்றுக்கான வாய்ப்புக்கு ஏனைய பிரிவு அணிகளின் முடிவு களுக்காக காத்திருக்க நேர்ந்துள்ளது.

# ஐ.பி.எல். இன் இரண்டாம் பாதியில் ஜோஸ் பட்லர் விளையாடமாட்டார்?



இங்கிலாந்து கிரிக்கெட் அணி வீரர் ஜோஸ் பட்லர், மீதமுள்ள ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடமாட் டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

செப்டம்பர், ஒக்டோபர் மாதங்களில் ஐ.பி.எல். 2021 தொடரின் மீதமுள்ள போட்டிகள் இடம்பெற ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. இந்த நிலையில், அதே காலப்பகுதியில் இங்கிலாந்து கிரிக்கெட் அணி பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளது. எனவே, ஜோஸ் பட்லரால் ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் ஏற்பட்ட கொரோனாவின் இரண்டாவது தீவிர அலை காரணமாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஐ.பி.எல். தொடர் இடைநிறுத்தப்பட்டது. இந்தத் தொடரில் எஞ்சியுள்ள போட்டிகளை ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடந்துவரும் நிலையில், வெளிநாட்டு வீரர்கள் பலரும் தமது தேசிய அணிகளுக்கான போட்டிகள் காரணமாக ஐ.பி.எல்.இன் இரண்டாம் பாதியில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆறாவது நாளிலும் தொடர்கிறது இந்தியா - நியூஸிசிலாந்து போட்டி



இந்தியா - நியூஸிலாந்து அணிகள் விளையாடுகின்ற உலக டெஸ்ட் சம்பி யன்ஷிப் இறுதிப் போட்டி இன்று ஆறாவது நாளிலும் தொடர்கிறது. சீரற்ற கால-நிலையால் போட்டியில் பாதிப்புகள் ஏற்படலாம் என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேலதிக நாளொன்று இந்தப் போட்டிக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இரண்டு நாள்கள் முழுமையாக மழையால் கழுவப்பட்ட நிலையில், இன்றைய ஆறாவது நாளிலும் போட்டியைத் தொடரத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் போட்டியில் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 217 ஓட்டங்களையும் நியூசிலாந்து அணி 249 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டன.

தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிவரும் இந்திய அணி, ஐந்தாவது நாளான நேற்று ஆட்டநேர முடிவின்போது 2 விக்கெட்டுக்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்று போட்டி ஆரம்பித்ததும் அடுத்தடுத்து இன்னுமிரு விக்கெட்டுக்களையும் இழந்த இந்திய அணி மொத்த மாக 4 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் 90 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

# டெல்டாவுக்காக நாட்டை முடக்க முடியாது ஆனால் அது பேரழிவு என்பதை ஏற்கிறோம்

## இராணுவத் தளபதி இப்படிக் கருத்து



மருத்துவர்கள், சுகாதார நிபுணர்களின் வேண்டுகோளின்படி 'டெல்டா' கொவிட் வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக முழு நாட்டையும் தொடர்ந்து முடக்கி வைத்திருக்க முடியாது என கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாடு தழுவிய பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும் மக்கள் பொறுப்பின்றி நடந்தால் இந்தியாவின் நிலைமைதான் இங்கு ஏற்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

'இந்தியாவில் 'டெல்டா' கொவிட் வைரஸ் ஏற்படுத்தும் கொடூர தாக்கங்களை நாள்தோறும் அறிகின்றோம். எனவே, மக்கள் அனைவரும் சுகாதார விதிமுறைகளைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.

'டெல்டா' வைரஸ் கொழும்பு மாவட்டத்தில் தெமட்டகொட என்ற பிரதேசத்தில் ஒரு பகுதியில் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை நாம் எடுத்துள்ளோம்.

ஆனால், அந்த வைரஸ் நாடு முழுவதும் பரவினால் பேரழிவு என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். மக்கள் பொறுப்புணர்வுடன் நடந்தால் இந்தப் பேரழிவைத் தடுக்கலாம்.

அதைவிடுத்து முழு நாட்டையும் தொடர்ந்து முடக்கி வைத்திருக்க முடியாது. அன்றாடம் வேலை செய்யும் மக்களைப் பட்டினியால் சாகடிக்க முடியாது. – என குறிப்பிட்டுள்ளார்.

# ஆயிரம் பில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல் வெளியிட நாடாளுமன்றத்தில் நிதி அமைச்சால் யோசனை

உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிதி அமைச்சால் நாடாளுமன்றத்தில் ஆயிரம் பில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களை வெளியிடும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிதி அமைச்சால் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட 1000 பில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களை வெளியிடும் யோசனைக்கு அரச நிதி பற்றிய குழுவால் அனுமதி வழங்கப்பட்டது.

அரச நிதி பற்றிய குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்சன யாப்பா தலைமையில் நாடாளுமன்றத்தில் கூடிய போது தற்போது நிலவும் கொரோனா சூழ்நிலையின் மத்தியில் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய இந்தக் கூட்டத்தை நடத்தும் நோக்கில் அரச அதிகாரிகள் ஒன்லைன் முறையின் ஊடாக இதில் இணைந்து கொண்டனர்.

இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, முஜிபுர் ரஹ்மான், கலாநிதி ஹர்ஷ டிசில்வா, அனுபபஷ்குவல், பேராசிரியர் ரஞ்சித் பண்டார, நளின் பெர்னாந்து மற்றும் இசுறு தொடங்கொட ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர்.ஆர்ட்டிகல, தற்போது காணப்படும் வரையறையான 2 ஆயிரம் பில்லியன் ரூபா பெறுமதியை 3 ஆயிரம் பில்லியன் ரூபாவாக அதிகரிப்பதற்கு இதன் ஊடாக எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

அத்துடன் இந்தத் தொகையை 6 மாதகாலங்களுக்குள் செலவு செய்வதற்கு எதிர்பார்க்கவில்லை என்றும், நாடாளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட கடன் பெறும் எல்லைக்குள் சகலவற்றையும் நிர்வாகம் செய்வதாகவும் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# அளவுக்கதிகமான மதுப்போத்தல்கள் கொண்டுசென்ற இருவர் கைதாகினர்



(சாவகச்சேரி நிருபர்)

பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட வேளையில் கடந்த திங்கட்கிழமை காலை மற்றும் பிற்பகல் வேளைகளில் அளவுக்கதிகமாக மதுப் போத்தல்களைக் கொண்டு சென்ற இருவர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திங்கட்கிழமை காலை சாவகச்சேரி நகர் பகுதியில் 180 மில்லி லீற்றர் அளவுடைய 50 சாராயப் போத்தல்களுடன் நபர் ஒருவர் கைதாகியுள்ளார்.

அதேவேளையில் பிற்பகல் கைதடியில் இருந்து கிளிநொச்சி நோக்கி கொண்டு செல்லப்பட்ட நூறு 180 மில்லி லீற்றர் கொள்ளளவுடைய சாராயப் போத்தல்களுடன் மேலும் ஒரு வரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மது ஒழிப்புப் பிரிவினர் இக் கைது நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நெல் விற்பனையில் மோசடி; சி.ஐ.டி. விசாரணை ஆரம்பம்

கடந்த அரசில் 88 ஆயிரத்து 615 மெட்ரிக் தொன் நெல் விலங்கு உணவாக குறைந்த விலையில் விற்கப்பட்டதால் 2.48 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது. இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. – இவ்வாறு விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினாவின்போது அரச தரப்பு எம்.பி. கே.பி. குமாரசிறி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

கடந்த அரசில் நல்ல நிலையில் இருந்த நெல் விலங்குகளின் தீவனமாகக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டது.

நெல் ஒரு கிலோவுக்கு 24 ரூபா குறைத்தே விற்கப்பட்டது. நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஒப்புதல் இல்லாமல் 88 ஆயிரத்து 615 மெட்ரிக் தொன் நெல் இவ்வாறு விற்பனை செய்யப்பட்டதால் 2.48 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது.

இதற்கு அப்போதைய அமைச்சர் உள்ளிட்ட அரசு தான் பொறுப்பு. இது தொடர்பாக சி.ஐ.டியும் விசாரித்து வருகின்றது – என்றார்.

# இருப்புக்களை பெருக்கும் சுயலாப கொள்ளையர்களால் எமது உழைப்புகள் உறுஞ்சப்படுவதை ஏற்க முடியாது

## தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் சங்கம் காட்டம்

கொள்ளை அடித்து எமது இருப்புக்களை பெருக்கிக் கொள்வது எமது நோக்கமல்ல. அதேநேரம் சுயலாப கொள்ளையர்களால் எமது பிரதேச கடற்றொழிலாளர்களது உழைப்புகள் உறிஞ்சப்படுவதை ஏற்கமுடியாதென தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு சங்கங்களின் சட்டவரையறையை அனுசரித்து செயற்படாத தொழிலாளர்கள் அனைவரும் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டு அவர்களது தொழில் நடவடிக்கைகள் அனைத்தும் சட்டவிரோதமானவையாக வரையறைசெய்து சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் தெரிவித்துள்ளனர்.

தம்பாட்டி கடற்றொழிலாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து தமது கடற்றொழில் நடவடிக்கைகள் மற்றும் சந்தைப்படுத்தலில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஊடக சந்திப்பொன்றை யாழ் ஊடக அமையத்தில் நடத்தியிருந்தனர்.

இதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

விளையாட்டுக் கழகம், பாலர் பாடசாலை, நாடக மன்றம் என பல பொது அமைப்புகளை எமது சங்கத்தின் நிதியிலிருந்து கடந்த 60 ஆண்டுகளாக நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

இந்நிலையில் தற்போதைய கொரோனா காரணமாக தொழில் நடவடிக்கைகள் பின்தங்கியுள்ள நிலையில் கடற்றொழில் மற்றும் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள சங்கம் சற்று தளர்வு நிலை கொடுத்துவந்தது.

இதனை சாதகமாகப் பயன்படுத்திய எமது பிரதேசத்தில் எமது சங்கத்திலிருந்து சுயநலன்களுக்காக பிரிந்து சென்று சிலர் தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதை சங்க ரீதியாக நாம் விசாரணைக்க உட்படுத்தும் போது வாழ்வாதார இழப்பு என்று காரணம் கூறி அனுதாபத்தை ஏற்படுத்தி தமது மோசடிகளையும் ஏமாற்று வேலைகளையும் மேற்கொள்கின்றனர். இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாம் கடற்றொழில் அமைச்சரிடம் இந்த விடயத்தை கொண்டுசென்றிருந்தோம். அவரும் மூன்று தடவைகள் எமது பிரதேசத்துக்கு வந்து குறித்த பிரச்சினைக்கு இருதரப்பு இணக்கப்பாட்டுடன் தீர்வு தந்திருந்தார்.

இவ்வாறு தீர்வு காணப்பட்ட நிலையில் வேறொரு அரசியல் தரப்பினர் இதை குழப்பும் நோக்குடன் குறித்த தரப்பினரை தூண்டிவிட்டு ஊடகங்களில் பொய்யான செய்திகளை பரப்பி வருகின்றனர். அவ்வாறான செய்திகள் அனைத்தும் பொய்யானவை.

அதேநேரம் கடற்றொழிலாளர்கள் தமது பிரச்சினையை கடற்றொழில் அமைச்சரிடம் தான் சென்று முறையிட முடியுமே தவிர விளையாட்டுத்துறை அமைச்சரிடம் முறையிடமுடியாது இதைத்தான் நாம் செய்தோம்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறந்த சமூக சேவகராகவும் மக்களின் வாழ்வியல் தொடர்பில் அதீத அக்கறை உடையவர் என்பதாலும் எமது இரு தரப்பினரையும் ஒற்றுமையுடன் இணைந்து செயற்படும் பொறிமுறையையே அன்றைய கூட்டத்தில் எடுத்துக் கூறி இணக்கப்பாட்டுக்கு வரச்செய்தார்.

இன்று இன்னொரு தரப்பு அரசியல்வாதிகளின் ஏவுதலில் குறித்த தரப்பினர் நாக்கு புறழ்வுடன் பேசி பொய்யான கருத்துக்களை ஊடகங்களுக்கு கொடுத்துவருகின்றனர்.

இதை நாம் வன்மையாக கண்டிப்பதுடன் எமது கடற்றொழில் சங்கங்களுடன் இணைந்து, அவர்கள் செயற்பாடாத பட்சத்தில் அவர்களது உறுப்புரிமைகளை இரத்து செய்து சட்ட நடவடிக்கைகளூடாக நடவடிக்கைகளை எடுக்க நேரிடும்.

அத்துடன் இவர்களது இத்தகைய மோசடியான செயற்பாட்டை சமூக ஒற்றுமை என்று பார்த்து இனியும் பொறுத்துக் கொண்டிருக்கமுடியாது. குறித்த நடைமுறையை செய்வதற்குத் தயாராகவே உள்ளோம்.

மேலும் தனிப்பட்டவரது உறவுமுறைக்காக எமது உழைப்பை நாம் இழக்க முடியாது. 53 லட்சம் ரூபா நிதி கடந்த காலத்தில் சூறையாடப்பட்டுள்ளது. இதை சட்டரீதியாக அணுகியிருந்த நாம், அதனை கட்டுமாறு குறித்த நபருக்கு உத்தரவும் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிதியை செலுத்தவேண்டிய நிலை உருவாகுவதாலேயே குறித்த நபர் எமது சங்கத்துக்குள் இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றார். – எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.06.2021இல் வெளியிடப்பெற்றது.